**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 34** **நாள் : 08.02.2019**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட பாராளுமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரம் குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்முறை விளக்கம் நாளை முதல் அளிக்கப்பட உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல்–2019யை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட பாராளுமன்ற தொகுதிகளில் உள்ள நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி அமைவிடங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரம் (VVPAT) ஆகியவை செயல்படும் விதம் குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்முறை விளக்கம் நாளை (09.02.2019) முதல் அளிக்கப்பட உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மூன்று பாராளுமன்ற தொகுதிகளில் 3,754 வாக்குச்சாவடி மையங்கள் 913 இடங்களில் உள்ளன. வருகின்ற பாராளுமன்ற பொது தேர்தல்–2019ல் வாக்காளர்கள் அனைவருக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரம் (VVPAT) குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாதிரி வாக்குப்பதிவு மற்றும் செயல்முறை விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

இதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் 32 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் ஒரு நாளைக்கு 4 அல்லது 5 வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு சென்று வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரம் (VVPAT) குறித்து செயல்முறை விளக்கத்தினையும், மாதிரி வாக்குப்பதிவினையும் நடத்தவுள்ளனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போதே அந்தந்த பகுதியிலுள்ள மாற்றுத்திறன் கொண்ட வாக்காளர்களின் விவரங்களை வாக்குச்சாவடி அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அனைவரும் அவர்களுடைய மாற்றுத்திறன் குறித்த விவரங்களை வாக்குச்சாவடி அலுவலரிடம் அளிக்குமாறும், வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டிருந்தால் படிவம்–6 அளிக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வாக்காளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் அருகாமையில் உள்ள வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு சென்று தங்களின் மாதிரி வாக்கினை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் செலுத்தி, வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரம் (VVPAT) மூலம் ஒப்புகைச் சீட்டு பெற்றுகொள்ளும் செயல்முறையினை தெரிந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**